# வடமராட்சிப் பிரதேசத்தின் சிறுதெய்வ வழிபாடு - ஒரு நோக்கு

**சிவரூபன் நிஜிதா[1], வி.பவனேசன்[2]**


## ஆய்வுச்சுருக்கம்:

*சைவமக்கள் இரண்டு வகையான வழிபாட்டு முறைகளைக் கையாள்கின்றனர். ஒன்று ஆகம வழிபாட்டு முறையாகும். மற்றையது ஆகமம் சாராத கிராமிய வழிபாட்டு முறையாகும். இக்கிராமியத் தெய்வத்தினை குலதெய்வம், நாட்டார் தெய்வம், சிறுதெய்வம் எனவும் அழைக்கின்றனர். இவ்வழிபாடானது கிராமப்புற மக்களின் வழிபாடாகவும் காணப்படுகின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடக்குக் கிழக்குப் பகுதியாக வடமராட்சிப் பிரதேசம் அமைந்திருக்கிறது. வடமராட்சிப் பிரதேசத்தில் பாரம்பரியமாகப் பேணப்பட்டு வந்த இவ்வழிபாடானது இன்று இயல்பான முறையிலும் எளிமையான முறையிலும் இப்பிரதேச மக்களால் சிறப்பாகப் பேணப்பட்டு வருகின்றது. மேலும் இவ்வழிபாடானது ஆகமமயமாக்கலுக்கு உள்ளாகாமல் தொடர்ந்து பேணப்படுகின்றது. இப்பிரதேசத்தில் சிறுதெய்வ வழிபாட்டிடங்களும், வழிபாட்டு முறைகளும் சிறப்பிடம் பெறுகின்றன. இப்பிரதேசத்தில் சிறுதெய்வங்களான காளி, காத்தவராயன், நரசிம்மர் பூதவராயர், மாடன், முனி, வாலையம்மன், முதலிப்பேச்சி, வீரபத்திரர், நாகதம்பிரான், வைரவர், காத்தாசி, கன்னியம்மன், அம்மிணி, பிள்ளையார், ஐயனார், கண்ணகியம்மன், நாச்சிமார், அண்ணமார், முருகன், மாரியம்மன், சீதையம்மன், முனியப்பர், பெரியதம்பிரான், ஆஞ்சநேயர், விறுமர், முதலி, மோகினி, திரௌபதியம்மன் ஆகியவற்றிற்கான கோவில்கள் காணப்படுகின்றன. இங்கு பெரும்பாலும் மரத்தடி, குளம், ஏரி போன்றவற்றுக்கு அருகிலும் திறந்த வெளிகளிலும் பெரிய மரங்களின் கீழும் தெய்வமாகக் கருதி வழிபடத்தக்க வேல், கல், சூலம் போன்றவற்றை வைத்து வழிபாடு செய்கின்றனர். சில இடங்களில் பீடங்கள் அமைக்கப்பட்டு வழிபாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதாவது வழிபடுவோரின் பொருளாதார நிலைக்கேற்ப கோயில்அமைப்பும் தெய்வ உருவங்களும் வேறுபட்டுக் காணப்படுகின்றன. மக்கள் தம் சமூகத்தின் விருப்பு வெறுப்புகளுக்குத் தக்கவாறு வழிபாட்டு முறைகளை அமைத்துக்கொள்கின்றனர். இந்த ஆய்வின் நோக்கம் இப்பிரதேச ஆலயங்களின் கிராமிய வழிபாட்டின் சிறப்பினை இளம் தலைமுறையினருக்குக் கையளிப்பதுடன் கிராமிய வழிபாட்டின் சிறப்பினை வெளிக்கொணர்தலும் ஆகும். இந்த ஆய்வானது வரலாற்றியல் ஆய்வு முறையாகவும், ஒப்பீட்டு ஆய்வு முறையாகவும் காணப்படுகின்றது. ஆலயங்கள் தொடர்பான வரலாற்று நூல்களும் கள ஆய்வும் முதனிலைத் தரவாக கொள்ளப்படுகின்றது. மேலும் மாநாட்டு மலர்கள், பருவஇதழ்கள், ஆய்வுக் கட்டுரைகள், கும்பாபிஷேக மலர்கள் போன்றன இரண்டாம் நிலைத் தரவுகளாகவும் அமைகின்றன. தேவையேற்படுகின்ற போது இவ்வழிபாடு பற்றி உரியவர்களிடம் செவ்வி காணலும் இடம்பெறுகின்றது.*


**திறவுச்சொற்கள்:** சிறுதெய்வம், வடமராட்சி, நம்பிக்கைகள், ஆகமம் சாராத வழிபாடு, சடங்குகள்


[1]*இந்துநாகரிகத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

*Nigitha26@gmail.com*

[2]*சைவசித்தாந்த துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*

*pvigneswary@univ.jfn.ac.lk*

**அறிமுகம்**

சைவமக்கள் இரண்டு வகையான வழிபாட்டு முறைகளைக் கையாளுகின்றனர். ஒன்று ஆகம வழிபாட்டு முறையாகும். மற்றையது ஆகமம் சாராத கிராமிய வழிபாட்டு முறையாகும். இக்கிராமியத் தெய்வத்தினை குலதெய்வம், நாட்டார் தெய்வம், சிறுதெய்வம் எனவும் அழைக்கின்றனர். அதாவது நல்லது நடந்தால் தெய்வத்தின் செயல் எனவும் தீயது நடந்தால் தெய்வத்தின் கோபம் எனவும் நம்புகின்றனர். இத்தெய்வங்கள் கிராமப்புற மக்களின் காவல் தெய்வமாகவும் நோய் நீக்கி நலம் தருவனவாகவும், வாழ்க்கைக்கு வளம் சேர்ப்பனவாகவும் விளங்குகின்றன. இவ்வழிபாட்டில் சடங்கு பிரதான இடத்தினை வகிக்கின்றது.

வடமராட்சிப் பிரதேசமானது யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடகிழக்கு பகுதியாகும். இப்பிரதேசம் வடமராட்சி தெற்கு மேற்கு, வடமராட்சி வடக்கு, வடமராட்சி கிழக்கு எனும் மூன்று நிர்வாகப் பிரிவுகளை உள்ளடக்கிய எண்பத்து எட்டு கிராமசேவகர் பிரிவுகளைக் கொண்டுள்ளது. இப்பிரதேசத்தில் உள்ள கிராமங்கள் மிகத் தொன்மையான பண்பாட்டுப் பாரம்பரியங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளன.

இப்பிரதேசத்தில் சிறுதெய்வ வழிபாட்டு முறைகளுள் பெருந்தெய்வ வழிபாட்டு முறை மரபுகளான பிராமணா் பூசை செய்தல், சமஸ்கிருத மந்திரங்கள் என்பன புகுத்தப்பட்ட போதிலும், சிறுதெய்வ வழிபாட்டுமுறை மரபின் எச்சங்கள் பலவற்றை இன்றும் காணமுடிகின்றது.

இப்பிரதேசத்தில் சிறுதெய்வ வழிபாட்டிடங்களும், வழிபாட்டு முறைகளும் சிறப்பிடம் பெறுகின்றன. சிறுதெய்வ வழிபாட்டுத்தெய்வங்களான காளி, காத்தவராயன், நரசிம்மர், பூதவராயர், மாடன், முனி, வாலையம்மன், முதலிப்பேச்சி, வீரபத்திரர், நாகதம்பிரான், வைரவர், காத்தாசி, கன்னியம்மன், அம்மிணி, பிள்ளையார், ஐயனார். கண்ணகியம்மன், நாச்சிமார், அண்ணமார், முருகன், மாரியம்மன், சீதையம்மன், முனியப்பர், பெரியதம்பிரான், ஆஞ்சநேயர். விறுமர். முதலி, மோகினி, திரௌபதியம்மன் முதலியவற்றின் கோவில்கள் இப்பிரதேசத்தில் காணப்படுகின்றன.

இவ்வாலயங்கள் பெரும்பாலும் மரத்தடி, குளம், ஏரி போன்றவற்றுக்கு அருகில் அமைந்திருக்கின்றன. மேலும் திறந்த வெளியில் மரத்தடிகளில் தெய்வமாக கருதி வழிபடத்தக்க வேல், கல், கல்லாயுதம், சூலம் போன்றவற்றை வைத்து வழிபாடு செய்கின்றனர். சில இடங்களில் பீடங்கள் அமைக்கப்பட்டு வழிபாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதாவது வழிபடுவோரின் பொருளாதார நிலைக்கேற்ப கோயில் அமைப்பும் தெய்வ உருவங்களும் வேறுபட்டுக் காணப்படுகின்றன.

இப்பிரதேசத்தில் கிராமியத் தெய்வ வழிபாடானது எளிமையான வழிபாட்டு நடைமுறைகளைக் கொண்டது. இவ்வழிபாட்டு முறைகள் முன்னோர் வழிபட்ட வழியே தொடர்ந்து நடைபெறுகின்றன. அதாவது விதிமுறை வகுத்து வழிபாடு நடாத்தப்படுவதில்லை. இத்தெய்வங்களுக்கு நாள் பூசை எனப்படும் ஆறு காலப்பூசைகள் நிகழ்த்தப்படுவதில்லை. மக்களின் விருப்பத்திற்கும் வசதிக்கும் ஏற்ப பூசைகள் நடைபெறுகின்றன. மக்கள் தம் சமூகத்தின் விருப்பு வெறுப்புகளுக்குத் தக்கவாறு வழிபாட்டு முறைகளை அமைத்துக்கொள்கின்றனர். இங்கு பிராமணர் அல்லாத சைவர் அல்லது அக்கிராமத்தில் ஒருவர் பூசகராகவோ பராமரிப்பாளராகவோ விளங்குகின்றார். அதாவது இவ்வழிபாடானது இனக்குழும முறைக்கேற்ப அமைவதைக் காணலாம்.

இங்குள்ள வழிபாட்டு முறைகளாக பொதுவாக செவ்வாய், வெள்ளி, ஞாயிறு நாட்களில் விளக்கு வைத்தல், மடைப்பண்டம் எடுத்தல், காய்வெட்டுதல், கலையாடுதல், கட்டுச் சொல்லல், பறையடித்தல், வெடிமுழங்குதல், மச்சப் படையல் படைத்தல், குளிர்த்தி, ஆண்டுதோறும் பொங்கல், வேள்வி, ஆலயத்தில் நேர்த்திக்கடனுக்காக விலங்குகளைத்தானம் வழங்கல், உயிர்ப்பலி கொடுத்தல், மடைபரவல், வடைமாலை சாத்துதல், தீமிதித்தல், கரகம் காவடி எடுத்தல், வில்வம் சாத்தி வழிபடல், அடுப்பு நாச்சிக்கு அடுப்படியில் வெற்றிலை பாக்குடன் உணவு படைத்தல், பாற்செம்பு கற்பூரச் சட்டி எடுத்தல், அங்கப்பிரதட்சணம் செய்தல், பெரிதாக ஒரு மோதகம் அவித்துப் படைத்தல், கரகம் ஆடல். கஞ்சிவார்த்தல் போன்ற வழிபாட்டு முறைகள் சிறப்பிடம் பெறுகின்றன.

**சிறுதெய்வ வழிபாட்டின் தோற்றம்**

சிறுதெய்வம் என்ற சொற்றொடரின் பயன்பாட்டைக் கி.பி 7ம் நூற்றாண்டில் வாழ்ந்த திருநாவுக்கரசு நாயனாரால் பாடப்பட்ட **“சென்று நாம் சிறுதெய்வம் சேரோம் அல்லோம்”** என்ற தேவாரத்தில் இருந்து அறியமுடிகின்றது (மௌனகுரு, சி., 2003:1).

மேலும், அவருக்கு பின் வாழ்ந்தவராகக் கருதப்படும் திருநாளைப் போவார் நாயனார் சிறுதெய்வங்களான காடன், மாடன் ஆகியவற்றை வணங்கிய பின்பு பெருந்தெய்வமான சிவனைத் தேடிச் சிதம்பரம் புறப்பட்டார் என்பதிலிருந்து சிறுதெய்வங்களான காடன், மாடன் முதலிய தெய்வங்கள் பற்றி அறியமுடிகின்றது.

“குருவை மறந்தாலும் குலதெய்வத்தை மறவேன்
குலதெய்வத்தை கும்பிட்டுக் கும்மியடி’2'

எனக் குலதெய்வ வழிபாட்டின் சிறப்பினை இப்பாடலில் இருந்து அறியமுடிகின்றது. (மௌனகுரு, சி., 2003:2).

இத்தெய்வ வழிபாடானது முன்னோர் வழிபட்ட வழியே தொடர்ந்து நடைபெறுகின்றது. விதிமுறை வகுத்து வழிபாடு நிகழ்த்தப்படுவதில்லை. தம் விருப்பு வெறுப்புக்களுக்கு தக்கபடி வழிபாட்டு முறைகளை அமைத்துக் கொள்கின்றனர். கிராமவாசிகள் கடவுளுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளும் அன்புப் பிணைப்பை உருவாக்குகின்றனர்.

கிராமியத் தெய்வங்கள் பற்றி உளவியல் பேரறிஞரான சிக்மன் பிராய்டு (Sigmund Freud) விளக்கம் கூறுகையில் இயற்கையிடமும் மரணத்தின் மீதும் மக்கள் கொண்ட அச்சமே இவ்வழிபாட்டிற்கு அடிப்படைக் காரணம் என்கின்றார் (சக்திவேல். சு., 1983:224)

டாக்டர் சக்திவேல் நாட்டுப்புறத் தெய்வங்களை ஐந்தாக வகைப்படுத்தியிருக்கிறார். அவர் அத்தெய்வங்களினை ஆண்தெய்வங்கள், பெண்தெய்வங்கள், குலதெய்வங்கள், சாதித் தெய்வங்கள், ஊர்த்தெய்வங்கள் என வகைப்படுத்தியிருக்கிறார் (சக்திவேல். சு., 1983:223).

டாக்டர் துளசி இராமசாமி நாட்டுப்புறத் தெய்வங்களை ஊர்த்தெய்வங்கள், இனத்தெய்வங்கள், குலதெய்வங்கள், மாலைத் தெய்வங்கள், சமாதித் தெய்வங்கள், துணைத் தெய்வங்கள் என்ற ரீதியில் வகைப்படுத்தியிருக்கிறார் (சக்திவேல். சு., 1983:229).

**ஆண்தெய்வங்கள்**

இப்பிரதேசத்தில் ஆண் தெய்வங்களான வீரபத்திரர், வைரவர், காத்தவராயர், ஐயனார், அண்ணமார், அனுமர், விறுமர், பூதவராயர், முனியப்பர், பனிக்கர், பிள்ளையார், முருகன், பெரியதம்பிரான், மாடன், மதுரைவீரன், கறுப்பன், வீரபாகு தேவர், நரசிங்கர், வதனமார், சத்தியசாயி பாபா, முனித்தெய்வம் போன்ற தெய்வங்கள் வழிபடப்படுகின்றன.

**பெண் தெய்வங்கள்**

பெண் தெய்வங்களாக முத்துமாரி, காளி, கண்ணகி, காத்தாசி, நாச்சிமார், பேச்சியம்மன், செவ்வாச்சி (அடுப்புநாச்சி), கடலாச்சி, முதலி, கொத்தி, சம்சணி, ஆதிபராசக்தி போன்ற தெய்வங்களும் வழிபடப்படுகின்றன.

**கிராமியத் தெய்வங்களும் வழிபாட்டு முறைகளும்**

இப்பிரதேசத்தின் கிராமிய வழிபாட்டின் தோற்றத்தை நோக்குகின்றபோது, இலங்கையில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் நாட்டில் வழிபாடுகள் தடைப்பட்டுக் காணப்பட்டன. அவ்வேளையில் கிறிஸ்தவ வணக்கம் மேலோங்கிக் காணப்பட்டது. இப்பிரதேச மக்களின் வழிபாட்டிடங்கள் அழிக்கப்பட்டன. போர்த்துக்கேய கத்தோலிக்க தேவாலயங்கள்

தோற்றம் பெற்றன. இப்பிரதேசத்தில் வாழ்கின்ற மக்களில் பலர் கிறிஸ்தவ மதத்தினை கடைப்பிடித்தனர். அவ்வாறு மதம் மாறாத இந்துக்கள் தங்கள் வழிபாட்டு முறையினை மாற்றி குடும்ப, குல ரீதியான தெய்வ வழிபாடுகளில் ஈடுபடத் தொடங்கினர் (கணபதிப்பிள்ளை, க., 1962:63). வீட்டு வளவுகளில் உள்ள மரங்களையும் அம்மரங்களின் கீழ் கல், பொல் போன்றவற்றையும் தெய்வத்தின் குறியீடாகக் கொண்டு வணங்கினர். நாட்டில் நிலவிய தெய்வ வணக்கங்கள் மறைக்கப்பட்டு வந்தன. இவ்வேளையில் தான் இப்பிரதேசத்தில் நாச்சியார் வழிபாடு சிறப்படைந்திருந்தது. ஒவ்வொரு வீட்டிலும் அடுப்புநாச்சி எனும் தெய்வத்தை வணங்கினர். அதாவது வீடுகளில் நல்லதோர் பெருநாள் வந்தால் வீட்டிலே செய்யும் பலகாரத்தில் ஒன்றை அடுப்புநாச்சிக்கு நேர்ந்து அடுப்படியில் வைத்து செம்பினால் நீர் தெளித்து படைக்கின்ற வழக்கம் தற்காலத்திலும் காணப்படுகிறது. மேலும் வாய் அவிச்சல், கஞ்சி ஊற்றப்பட்டால் ஏற்படும் காயம் குணமடைய அடுப்புநாச்சியை நேர்ந்து வழிபாடு செய்வதனைக் காணலாம்.

மேலும் இவ்வடுப்புநாச்சி வழிபாட்டை இப்பிரதேச மக்கள் செவ்வாச்சி வழிபாடு எனவும் அழைக்கின்றனர். குடத்தினை வைத்து வணங்கிய பாரம்பரியத்தின் தடயமாக இவ்வழிபாட்டினை செவ்வாச்சி வழிபாடு எனவும் அழைக்கின்றனர். செவ்வாச்சிக்கு மக்கள் நீர்க்கஞ்சி, வடைகள், சுட்டமீன் போன்ற பொருட்களைப் படைக்கின்றனர். இமையாணன் எனும் இடத்தில் மண்குடம் வைத்து வழிபடப்படுகின்றது. இவ்வழிபாட்டினை இப்பிரதேச மக்கள் பகவதியம்மன் என அழைக்கின்றனர். இவ்வழிபாட்டிற்குரிய தெய்வமாக கறுப்பு நிற வண்ணம் கொண்ட வண்ணாத்துப்பூச்சி காணப்படுகின்றது. இப்பூச்சி இனத்தின் இரு செட்டையிலும் இரண்டு கண்கள் காணப்படுகின்றன. இப்பூச்சியினைக் கண்டால் இத்தெய்வத்தினை நினைவுபடுத்தி தம் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுகின்றனர். போர்த்துக்கேயருக்கு பயந்து அக்காலத்தில் மக்கள் குடத்தினை வைத்து வழிபட்டிருக்கலாம். இவ்வழிபாடானது மருவி இன்று செவ்வாச்சி வழிபாடாகக் கடற்கரையை அண்மித்த பிரதேசங்களில் காணப்படுகின்றது.

இப்பிரதேசத்தில் கொத்தி எனும் தெய்வத்திற்கு தனிச்சிறப்பிடம் காணப்படுகிறது. இத்தெய்வமானது பிரசவம் பார்க்கும் மருத்துவிச்சிக்கு உதவுவதாக நம்பப்படுகிறது. பிரசவம் பார்க்கும் நேரத்தில் கொத்திக்கு கழித்தல் எனும் சடங்கு இடம்பெறுகின்றது. கொத்தியை கொத்திப்பேய் என்ற நிலையிலும் பிரசவ காலத்தில் அத்தெய்வத்தினை வணங்கி உதவி பெறுவதுடன் கழிப்பு கழித்தல் எனும் சடங்கையும் மேற்கொள்கின்றனர்.

கண்ணகி எனும் சிறுதெய்வ வழிபாட்டை வடமராட்சி பிரதேசத்தில் காணமுடிகின்றது. மாதனை, மந்திகை, கரணவாய் எனும் பகுதிகளில் கண்ணகி கோவில்கள் அமைக்கப்பட்டு வழிபாடு செய்கின்றனர். சம்ஸ்கிருத வழிபாடு மேலோங்கிய நிலையில் நீண்டகால வழக்கில்

காணப்பட்ட கண்ணகி, திரௌபதி என்ற பெண் தெய்வங்களுக்கு பதிலாக அவ்விடங்களில் புவனேஸ்வரி எனும் தெய்வத்தினை பிரதிஷ்டை செய்தனர் (கணபதிப்பிள்ளை, க., 1962:64). இதற்கு உதாரணமாக கரணவாய் கண்ணகை அம்மனுக்கு பக்கத்தே உச்சில் புவனேஸ்வரி அம்பாள் ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் குடத்தனை, மாளிகைத்திடல், காரையூர், நாகர்கோயில், வல்வெட்டி போன்ற இடங்களில் உள்ள கோவில்களிலும் இவ்வழிபாட்டின் சிறப்பினைக் காணமுடிகிறது.

சப்த கன்னியர் கோவில்கள் இப்பிரதேசத்தில் காணப்படுகின்றன. வெள்ளி தோறும் விளக்கு வைக்கப்பட்டு ஆண்டுக்கு ஒருமுறை பொங்கல் பொங்கி வழிபாடு செய்கின்றனர். செம்பியன்பற்று எனும் இடத்தில் உள்ள நாச்சிமார் கோயில், கரணவாய் வடக்கில் உள்ள கோவில்களில் இவ்வழிபாட்டினைக் காணமுடிகின்றது.

நாகதம்பிரான் வழிபாடு இப்பிரதேசத்தில் சிறப்படைந்து காணப்படுகிறது. நாகத்திற்கு மக்கள் வழிபாடு செய்வதுடன் தமது நேர்த்திக் கடன்கள் செலுத்துவதும் குழந்தைப்பேறு இன்மைக்கு நாகதோஷம் என எண்ணி நாகத்திற்குப் பல சிறப்பு வழிபாடுகள் மேற்கொள்கின்றனர். இவ்வழிபாட்டிடங்கள் புலோலி மேற்கு, வல்வெட்டித்துறை, வெற்றிலைக்கேணி, உடுத்துறை, நாகர்கோயில் போன்ற இடங்களில் காணப்படுகின்றன. இவ்வழிபாடானது திராவிட மக்களின் பண்டைய வணக்கங்களில் ஒன்றாகும். ஆண்டுக்கு ஒருமுறை பொங்கல் சிறப்பாக நடைபெறுகின்றது.

பெரிய தம்பிரான் வழிபாடு இப்பிரதேசத்தில் காணப்படுகின்றது. பெரிய தம்பிரான் கோயில்களில் ஒருமுறை மடை பரவுகின்றனர். கரவெட்டி, சண்டில் குளத்தடியில் பெரிய தம்பிரான் கோயிலில் நடக்கும் மடையில் தாழங்காயினை படைப்பார்கள். படைக்கப்பட்டவை அங்கு அழுகும் வரை இருப்பதாகவும் கூறப்படுகிறது (கணபதிப்பிள்ளை, க., 1962:61). இவ்வழிபாடு தும்பளை, புலோலி கிழக்கு, மாயக்கை, உடுப்பிட்டி, வறாத்துப்பளை போன்ற இடங்களில் காணப்படுகின்றது. வறாத்துப்பளை எனும் இடத்தில் பெரிய தம்பிரான், வயல்களை காக்கின்ற பாதுகாப்புத் தெய்வமாக வழிபடப்படுகின்றார்.

இடத்துக்கிடம் பூதவராயர் ஆலயங்களையும் இப்பிரதேசத்தில் காணமுடிகின்றது. வீரபத்திரரின் மூர்த்தங்களில் இதுவும் ஒன்று. செவ்வாய், வெள்ளி தினங்களில் விளக்கு வைத்து வழிபாடு செய்கின்றனர். இவ்வழிபாடு வீரவணக்க அடிப்படையில் அமைந்திருக்கலாம். இவை துன்னாலை, பருத்தித்துறை போன்ற இடங்களில் காணப்படுகின்றன.

மேலும் வடமராட்சிப் பிரதேசத்தில் வீடுகளில் சிறுசிறு கோயில்களாக வழிபடப்படும் தெய்வங்களும் உள்ளன. இத்தெய்வங்கள் வீட்டுத் தெய்வங்கள் அல்லது குலதெய்வம் என்று அழைக்கப்படுகின்றன. ஈழத்தில் உள்ள தமிழ் மக்கள் வீடுதோறும் ஒவ்வொரு தெய்வத்தை வாலாயம் பண்ணி வணங்கி வருகின்றனர். இவ்வணக்கம் திராவிட வணக்கம் சார்ந்தது. காளி, வைரவர் போன்ற தெய்வங்கள் அதிகமாக வீடுகளில் வைத்து வழிபாடு செய்கின்றனர். இத் தெய்வங்களுக்கு செவ்வாய், வெள்ளி நாட்களில் விளக்கு வைத்து, பழம், வெற்றிலை, பாக்கு என்பன படைத்து கற்பூர தீபம் காட்டுவர். தம் குடும்பத்தில் நடக்கும் துன்பங்கள், பில்லி சூனியம் போன்றவற்றை தீர்த்து அருள்வதாக இத்தெய்வங்களை நம்புகின்றனர். இவ்வழிபாடு பொதுவாகப் பல இடங்களிலும் காணப்படுகிறது. பருத்தித்துறை, புலோலி, ஓடைக்கரை, கரவெட்டி, கொம்பாந்தறை, கரணவாய், இமையாணன், துன்னாலை, அல்வாய், அத்தாய், வியாபாரிமூலை போன்ற இடங்களில் வழிபடப்படுவதைக் காணலாம்.

பேச்சியம்மன் வழிபாடும் இப்பிரதேசத்தின் சிறப்பிற்குரியது. பருத்தித்துறை, ஓடைக்கரை எனும் இடத்தில் பேச்சி என்னும் தெய்வத்தை கண், வாய், மூக்கு என கீறப்பட்ட மரக்குற்றியில் அமர்த்தி அருகில் கருங்காலிக் கொட்டன் வைத்து வழிபாடுகள் செய்யப்படுகின்றன. மேலும் இப்பிரதேசத்தில் ஓடைக்கரை எனும் இடத்தில் சிறிய சதுரவடிவ கொங்கிறீட் கட்டடத்தில் பித்தளை செம்பு விளக்கும், திருநீற்றுத் தட்டும் வைத்து அப்பகுதி மக்களால் நேர்த்திக் கடன்கள் செய்தும் பூசைப்பொங்கல், வேள்வி போன்ற வழிபாட்டு முறைகளுடன் வழிபாடுகள் மேற்கொள்கின்றனர்.

மேலும், முதலிப்பேச்சி, காத்தாசி, வாலையம்மன், அம்மிணி, கன்னியம்மன் போன்ற தெய்வங்களின் வழிபாடுகளும் பருத்தித்துறைப் பிரதேசத்தில் காணப்படும் சிறப்பிற்குரியன. ஆனாலும் இங்கு செம்பினால் ஆன கோளவடிவ சலங்கைகள், காப்பு, காற்சிலம்பு போன்றன வைத்து வழிபடப்படுகின்றன. இத்தெய்வத்திற்கு கரகம், பாற்செம்பு, பொங்கல் போன்ற வழிபாட்டு முறைகளில் வழிபாடு செய்யப்படுகிறது. காத்தாசி தெய்வமும் அவ்வூர் மக்களின் குலத்தைக் காக்கும் ஆச்சியாக வழிபடப்படுகின்றது.

இப்பிரதேசத்தில் வாலையம்மன் வழிபாடு சிறப்பாகக் காணப்படுகின்றது. பருத்தித்துறை நகரின் ஓடைக்கரை பகுதியில் ஆதி அம்மன் கோயிலுக்கு அருகாமையில் இலுப்பை மரத்தின் கீழ் சீமெந்தினாலான மேடைகட்டி செவ்வாய் வெள்ளி நாட்களில் பூசை செய்து விளக்கு வைப்பதுடன் ஆண்டுக்கு ஒருமுறை பொங்கல் வேள்வி செய்து வழிபடுகின்றனர்.

அம்மிணி வழிபாடானது, பருத்தித்துறைப் பகுதியில் காணப்படுகின்றது. இங்கு இத்தெய்வத்திற்கு விக்கிரகம், சூலம், கல் ஏதும் இல்லை. இந்த மரத்தின் அருகில் கோயில்

கட்டப்பட்டு விசேட வழிபாடுகள் இடம்பெறுகின்றன. வைகாசிப் பூரணை மடை, திருவெம்பா, நவராத்திரிப்பூசை போன்ற வழிபாடுகள் இடம்பெறுகின்றன. இவ்வழிபாட்டை பருத்தித்துறை நகரில் ஓடைக்கரை எனும் இடத்தில் அதிகமாக காணமுடிகின்றது.

வடமராட்சிப் பகுதியில் கன்னியம்மன் வழிபாட்டின் சிறப்பினையும் காணமுடிகின்றது. இப்பிரதேசத்தில் பருத்தித்துறை நகரில் கன்னியம்மன் கோயில் காணப்படுகின்றது. வெள்ளைச் சேலையுடன் தெய்வப்படம் வைத்து வழிபடல், ஞாயிறு, வெள்ளி தினங்களில் வழிபாடுகள் மேற்கொள்வதுடன் சிறப்புப் பூசைகளும் நவராத்திரி, தைப்பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு போன்ற விசேட நாட்களில் வழிபாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

காத்தவராயன் வழிபாடானது இப்பிரதேச மக்களால் சிறப்பாக வழிபடப்படுகின்றது. இத்தெய்வம் முத்துமாரியம்மன் வழிபாட்டோடு தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. மாரி என்றால் மழைத் தெய்வமாகவும் வறட்சியை போக்குவதாகவும் அம்மை நோய்களில் வெப்ப நோய்களில் இருந்து பாதுகாப்பதாகவும் நம்பி மக்களால் இவ்வழிபாடு மேற்கொள்ளப்படுகிறது. மாரியம்மன் கோயில்களில் மட்டுமன்றி ஏனைய பெண் தெய்வ கோயில்களான பத்திரகாளி, சக்தி, கண்ணகி, சாமுண்டேஸ்வரி, பண்டாரி அம்மன் போன்ற கோயில்களில் பரிவாரத் தெய்வமாக காத்தவராயர் காணப்படுகிறார். இவ்வழிபாட்டில் காத்தான், கல், கழுமரம் என்பவற்றில் அமர்த்தப்பட்டுள்ளார். கழுமரம் காத்தானின் அகோர நிலையான கழுவெறியைக் குறிப்பிடுகின்றது. இத்தெய்வத்திற்கு வல்வெட்டித்துறை மத்தி, மாவடி என்ற இடத்தில் கழுவேறியும் (கழுமரம்) காத்தான் கோயிலும் காணப்படுகின்றன.

மேலும் கற்கோவளம் அம்மன் கோவிலில் காத்தானை விக்கிரக நிலையில் உருவமாக வழிபடுகின்றனர். கழுவேறியை ஞானக்காத்தான் என்று கூறி இதற்கு மச்சப்படையல் படைப்பர். மேலும் மச்சப்படையல் படையாத கோவில்களும் காணப்படுகின்றன. பண்டாரி அம்மன் கோயிலில் இருந்த காத்தானுக்கு மச்சப்படையல், சாராயம் படைக்கப்பட்டு இச்சாப்பாடு பலருக்குப் பகிர்ந்தளிக்கப்படும். அவ்வூர் மக்கள் காசு கொடுத்து வாங்குவர். இதனை சிவமருந்து என்று அழைப்பர். இம்மருந்தானது நோய்களில் இருந்தும் ஆபத்தில் இருந்தும் இவ்வூர் மக்களைக் காப்பதாக நம்பப்படுகின்றது.

துன்னாலை தெற்கு தில்லையம்பலம் எனும் இடத்தில் உள்ள பிள்ளையார் ஆலயத்திலும் கிராமிய வழிபாட்டின் சிறப்பினைக் காணமுடிகின்றது. மக்கள் தங்கள் சந்ததி விருத்திக்காகவும், விலங்குகளின் நன்மைக்காகவும் பெரிதாக ஒரு மோதகம் அவித்துப் படைப்பதுடன் அன்னதானம், பொங்கல் பொங்கியும் வழிபாடுகளை மேற்கொள்கின்றனர். ஆடு,

மாடு, கன்றுகள் ஈன்றவுடன் இப்பிரதேசத்து மக்கள் முதலில் அப்பாலில் பிள்ளையாருக்கு அபிசேகம் செய்யும் பழக்கமும் காணப்படுகின்றது.

இப்பிரதேசத்தில் அண்ணமார் வழிபாடு சிறப்பிடம் பெறுகின்றது. இவ்வழிபாடானது இப்பிரதேசத்தில் ஊரின் எல்லைகளிலும் நடுப்பகுதியிலும் வழிபடப்படுகின்றது. இத்தெய்வத்தின் குறியீடாகக் கல்லும், பொல்லும் காணப்படுகின்றன. இத்தெய்வத்திற்கு ஆலயங்களும் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் விசேட தினங்களில் பொல்லு கொண்டு வரப்பட்டு குறிப்பிட்ட இடத்தில் வைத்து வழிபாடுகள் மேற்கொள்கின்றனர். பொங்கல் நாளன்று ஆடு, கோழி பலியிட்டும் சாராயம், முட்டை போன்ற படையல்கள் படைக்கப்பட்டும் இந்நாளன்று கட்டுச் சொல்லுதல், கலையாடுதல், சூனியம் நிவர்த்தி செய்தல் போன்றன செய்யப்படுகின்றன. இத்தெய்வ வழிபாடுகள் மந்திகை, செம்பியன்பற்று, அல்வாய், அல்வாய் வடமேற்கு, அல்வாய் கிழக்கு போன்ற இடங்களில் மேற்கொள்ளப்படுகின்றன.

இப்பிரதேசத்தில் வீரபத்திரர் வழிபாடு சிறப்பிடம் பெறுகின்றது. இத்தெய்வமானது சிவபெருமானின் உக்கிர வடிவம் என நம்பிக்கை கொண்டு வழிபாடுகளை மேற்கொள்கின்றனர். இத்தெய்வத்திற்கு கரவெட்டி மத்தி, பருத்தித்துறை, கற்கோவளம், தென்புலோலி, வேம்படி, புலோலி தெற்கு, குடத்தனை, நாகர்கோயில், செம்பியன்பற்று, மருதங்கேணி, ஆழியவளை போன்ற இடங்களில் கோவில்கள் காணப்படுகின்றன. இத்தெய்வத்திற்கு செவ்வாய், வெள்ளி, ஞாயிறு போன்ற நாட்களில் பூசைகள் இடம்பெறுவதுடன் விசேட தினங்களில் பொங்கல், மடை பரவி வழிபாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

முனியப்பர் வழிபாடும் இப்பிரதேசத்தில் சிறப்பிடம் பெறுகின்றது. வடமராட்சிப் பிரதேசத்து வல்லைப் பகுதியில் மரத்தடியில் முனி உறைவதாக நம்பப்படுகின்றது. யாழ்ப்பாணம் செல்லும் பயணிகள் அம்மரத்திற்கு பக்கத்தில் கற்பூரம் கொழுத்தி வழிபாடு செய்கின்றனர்.

மேலும் புறாப்பொறுக்கி எனும் கிராமத்தில் முனியானது ஆலமரத்தினை உறைவிடமாகக் கொண்டது. அவ்வாலமரம் தறிக்கப்பட்டதும் தற்போது மருத மரத்தில் உறைவதாக நம்புகின்றனர். உயிலங்கன்றடி முனி, திக்கத்து முனி, சக்கோட்டை முனி, தாமரைக்குளத்து முனி, பருத்தித்துறைச் சந்தைப் புளியடி முனி போன்ற முனித் தெய்வங்கள் காணப்படுவதாக இங்குள்ள மக்களால் நம்பப்படுகின்றது. இத்தெய்வங்களுக்கு பொங்கல் பொங்கி, நேர்த்திக் கடன் செலுத்தி வழிபாடு செய்கின்றனர்.

வடமராட்சிப் பிரதேசத்தில் பனிக்கர் என்னும் தெய்வ வழிபாடு சிறப்பாக காணப்படுகின்றது. இத்தெய்வத்திற்கு அல்வாய் வடமேற்கு பகுதியில் ஆலயம் காணப்படுகிறது. இத்தெய்வம் வெள்ளைக்காரர் காலத்தில் வாழ்ந்ததாகவும் அக்காலத்தில் அவர் அப்பகுதி மக்களுக்கு பொன் பொருள் வழங்கியதாகவும் அதனால் அவருக்கு ஆலயம் கட்டி வழிபாடு செய்வதாகவும் அவ்வூர் மக்கள் கூறுகின்றார்கள். இப்பனிக்கருக்கு இறைச்சி, மீன், முட்டை, சாராயம், பழவகைகள் போன்ற அனைத்து உணவுகளும் படைக்கப்படுகின்றன. ஒவ்வொரு வருடமும் குறிப்பிட்ட ஒரு நாளில் வேள்விக்காக ஆடு, மாடு, கோழிகள் ஏலத்தில் விடப்படுகின்றன. மேலும் வேள்வி பூசைகளும் இடம்பெறுகின்றன.

வடமராட்சிப் பகுதியில் விறுமர் வழிபாடு சிறப்பாகக் காணப்படுகின்றது. இங்கு விறுமருக்கு குறிப்பிட்ட நாட்களில் பூசை வழிபாடுகள் செய்வதுடன் வேள்விப் படையல்களும் இடம்பெறுகின்றன. புலோலி வடமேற்கு, கிழவிதோட்டம், முடக்காடு, கற்கோவளம், மருதங்கேணி போன்ற இடங்களில் இவ்வழிபாடுகள் காணப்படுகின்றன. குறிப்பிட்ட இனக்குழு மக்களே அத்தெய்வத்தினை சிறப்பாக வழிபடுவதனைக் காணமுடிகின்றது.

மேலும் இப்பிரதேசத்தில் வழிபடப்படும் தெய்வங்களுள் முதலி எனும் தெய்வம் சிறப்பிடம் பெறுகின்றது. இத்தெய்வத்திற்கு விசேட தினங்களான செவ்வாய், வெள்ளி நாட்களில் பொங்கல்கள், மடைபரவல், வேள்வி, கரகம், காவடி எடுத்து வழிபாடுகள் செய்யப்படுவதாகவும் அறியமுடிகிறது. தும்பளை, தும்பளை கிழக்கு, புலோலி, கரணவாய், கரவெட்டி போன்ற இடங்களில் இவ்வழிபாடுகள் இடம்பெறுகின்றன. முதலிகள் வணக்கம் வீரவணக்கத்தை சேர்ந்ததாக இருத்தல் வேண்டும். சில இடங்களில் புளி, பூவரசு போன்ற மரங்களுக்கு அடியில் உருவம் எதுவும் இன்றியும் தண்ணீர், பூ, வில்வம் சாத்தி வழிபாடுகள் செய்யப்படுகின்றன.

மேலும் வடமராட்சிப் பிரதேசத்தில் மேல்மருவத்தூர் அம்மன் வழிபாடும் சிறப்பிடம் பெறுகின்றது. இத்தெய்வத்திற்கு கிளானை எனும் இடத்தில் கோயில் அமைத்து வழிபாடுகள் மேற்கொள்கின்றனர். இங்குள்ள மக்கள் செவ்வாடை உடுத்தி விரதம் இருந்து அம்மனை வழிபடுகின்றனர்.

ஐயனார் வழிபாடு, குறுப்பர் எனும் தெய்வ வழிபாடு, முருகன் வழிபாடு போன்ற வழிபாடுகளும் இடம்பெறுகின்றன. ஐயனார் என்ற தெய்வத்திற்கு வெற்றிலை மாலை கட்டி வழிபாடு செய்கின்றனர். மேலும் ஐயப்பன் தோத்திரம் பாடி ஐயப்பன் நோன்பு இருந்து வழிபாடுகளை மேற்கொள்கின்றனர். நெல்லியடிப் பகுதியிலும் வல்லைப் பகுதியிலும் கற்கோவளப் பகுதியிலும் இவ்வழிபாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேலும், குறுப்பர் எனும் தெய்வத்திற்கு தும்பளை கிழக்கு பகுதியில் கோயில் அமைக்கப்பட்டு வழிபாடுகள் செய்யப்படுகின்றன. இங்கு காத்தானையும் குடி அமர்த்தி குறுப்பர் எனும் ஆண்தெய்வத்தினை காவல் தெய்வமாகப் போற்றி வழிபாடு செய்கின்றனர். இங்கு குறுப்பருக்கு விசேட தினங்களில் விளக்கு வைக்கப்பட்டு, ஆண்டுக்கு ஒருமுறை பொங்கல், வேள்வி என்பன இடம்பெறுகின்றன.

## மதிப்பீட்டுரை

தொகுத்து நோக்குகின்றபோது இப்பிரதேசத்து மக்கள் இக்காலத்திலும் தங்கள் இந்துப் பாரம்பரியத்தை கைவிடாது தொடர்ச்சியாக சிறுதெய்வ வழிபாட்டு முறைகளைப் பேணி வருகின்றனர். அதாவது அவர்களின் வழிபாட்டு முறைகளாக விசேட தினங்களில் விளக்கு வைத்தல், மடைப்பண்டம் எடுத்தல், கலையாடல், கட்டு சொல்லல், காய் வெட்டுதல், பறையடித்தல், வெடி முழங்குதல், மச்சப்படையல் படைத்தல், குளிர்த்தி, ஆண்டுதோறும் பொங்கல், உயிர்ப்பலி கொடுத்தல், மடைபரவல், தீ மிதித்தல், கரகம், காவடி, அடுப்பு நாச்சிக்கு அடுப்படியில் வெற்றிலை பாக்கு படைத்தல், கரகம் ஆடுதல் போன்றன பேணப்படுகின்றன. இப்பிரதேசத்து கிராமிய வழிபாட்டு முறைகள் இன்றும் இப்பிரதேசத்து மக்களால் போற்றிப் பேணப்படுகின்றன. இத்தகைய வழிபாட்டு முறைகளையும் தெய்வங்களின் சிறப்பினையும் நாம் கண்டு கொள்ள முடிகின்றன.

## உசாத்துணை

இரகுவரன், பா., (2012), பருத்தித்துறை யூராம், தீபன் பதிப்பகம், பருத்தித்துறை.

இரகுவரன், பா., (2001), ஊரும் வாழ்வும் தும்பளைக் கிராமம் பற்றிய சமூகவியல் ஆவணம், தும்பளை.

இராமசாமி, துளசி, (1985), நெல்லை மாவட்ட நாட்டுப்புறத் தெய்வங்கள், உலக தமிழ் ஆராட்சி நிறுவனம், சென்னை.

இன்பமோகன், வ., (2012), கிழக்கிலங்கைச் சடங்குகள், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

கணபதிப்பிள்ளை, க., (1962), ஈழத்து வாழ்வும் வளமும், பாரி நிலையம், சென்னை.

கந்தையா, வி. சி., (1997), மட்டக்களப்பு சைவக்கோயில்கள், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.

கிருஸ்ணராசா, செ., (2012), இலங்கையின் பண்பாட்டு பரிணாமத்தின் அடிப்படைகள், AB creator and publishers, கொழும்பு.

குணபாலசிங்கம், வ., (2012), இலங்கையில் இந்து பௌத்த சமய மரபுகளில் சிறுதெய்வ வழிபாடு ஓர் நோக்கு, இந்து சமயமும் அவைதீக நெறிகளும், கலாசார அலுவல்கள் திணைக்களம்.

கைலாசநாதக்குருக்கள், கா., (1992), சைவதிருக்கோயில் கிரியை நெறி, ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலய நிதியம், யாழ்ப்பாணம்.

சக்திவேல், சு., (1983), நாட்டுப்புறவியல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

சக்திவேல்,சு. (1983), நாட்டுப்புறவியல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை

சண்முகலிங்கம், க., (பதி) (1995), தமிழ் நாட்டார் வழக்காற்றியல், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.

சண்முகலிங்கன், என்., (2008), சமூகவியல் கோட்பாட்டு மூலங்கள், கரிகரன் பதிப்பகம், யாழ்ப்பாணம்.

சிவசுப்பிரமணியம், வ., (2004), மட்டக்களப்பு நாட்டாரியல், லக்சுமி பதிப்பகம், கொழும்பு.

சிவத்தம்பி, கா., (1993), யாழ்ப்பாணச் சமூகத்தை விளங்கிக் கொள்ளல், தர்ஷனா பிரசுரம்.

சிவலிங்கராஜா, எஸ்., (1996), யாழ்ப்பாணப் பண்பாடு மறந்தவையும் மறைந்தவையும், குமரன் புத்தக இல்லம்.

சிவலிங்கராஜா, எஸ்., (1984), வடமராட்சியின் கல்விப் பாரம்பரியமும் இலக்கியவளமும், வடமராட்சி கல்வி வட்டம்.

சிவானந்த சர்மா, பா., (1986), சைவாலயக் கிரிகைகள், திருமகள் பதிப்பகம், சுன்னாகம்.

சுகந்தி, சு., (2006), மட்டக்களப்பு மாவட்டத்துக் கிராமிய வழிபாட்டுச் சடங்குகளும் அவை தொடர்பான பாடல்களும், இலண்டன் தமிழ் இந்துமன்றம் மட்டக்களப்பு.

திருச்செல்வம், என். கே., (2010), தென் இலங்கையில் புராதன இந்துகோயில்கள், பாகம் 1 இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.

மகேஸ்வரலிங்கம், க., (1996), மட்டக்களப்பு சிறுதெய்வ வழிபாடு ஓர் அறிமுகம், தில்லை வெளியீடு, மகிழடித்தீவு.

மௌனகுரு,சி. (2003), மட்டக்களப்பு தமிழகத்தில் இந்துப் பண்பாடு, 2ம் உலக இந்து மாநாடு, குமரன் புத்தக இல்லம்

வித்தியானந்தன், சு., (1974), நான்காவது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டு நிகழ்ச்சிகள், தமிழாராய்ச்சிமன்றம், சென்னை.

வீரகத்தி, க., (1995), அபிராமி நவநீதம், வாணி கலைக்கழகம், கரவெட்டி.